இருக்கின்ற அந்தக் கூட்டத்தை நாம் சமாளிக்கக்கூடிய அளவிற்குச் சூழ்நிலைகள் இல்லாமற் போய்விடவில்லை. இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பேருந்துகள் தேவை என்பதுதான் இங்கே சொல்ல வேண்டிய கருத்தாக இருக்கிறது.

திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த நெரிசலைக் குறைப்பதற்கு, சர்க்கார் தைரியமாக சர்க்கார் அலுவலகங்களின் நேரத்தை மாற்றினால் முடியும். அவ்வாறு மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அந்த நேரங்களை ஓரளவுக்கு மாற்றியமைத்து வைத்து இருக்கிறோம். இன்னும் கூட இந்த அடிப்படையிலே இதைப்பற்றி ஆராய்ந்து கூட அதை மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது.

சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையில் குளிர்சாதன வசதியுடைய பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 825: திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே ஆம்பூர் வழியாக குளிர் சாதன வசதியுடைய பேருந்துகள் விடும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : இல்லை.

திரு ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே உள்ள ஆம்பூர் முக்கியமான இடமாக இருக்கிறது. தொழில் துறையிலே மிகவும் பிரசித்தி பெற்ற இடமாக விளங்குகிறது. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தொழில் ரீதியாக அங்கே வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே அவர்கள் வந்து செல்வதற்கு வசதியாக உடனடியாகப் புதிய பஸ் விட முடியவில்லையென்றாலும்கூட, சித்தூர் வழியாகச் செல்லும் பஸ்ஸை ஆம்பூர் வழியாக விடுவதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

1981 எப்ரல் 21]

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, சித்தூர் வழியாகப் போய்க்கொண்டிருப்பதை மாற்றி இங்கே விட்டால் அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் மீண்டும் ஒருமுறை இங்கே கேள்வியைக் கேட்கக் கூடும். இருந்தாலும்கூட இந்தப் பகுதியிலே, கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூர் வரை 60 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பாதை சரியில்லாத காரணத்தால் இப்பொழுது அந்தக் குளிர் சாதன வண்டியை அங்கே விடுவது அவ்வளவு சாத்தியமில்லாமல் இருக்கிறது. எனவே, அந்தப் பாதை முடிவடைந்தபின்பு அதைப்பற்றி நாம் சிந்தித்து நடவடிக்கை எடுப்போம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே ஆம்பூர் வழியாகச் செல்லும் பாதை அழகான பாதை. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட பாதை குறுக்கு வழியாக போடப்படும் பாதை. ஆகவே இப்பொழுது இருக்கின்ற பாதையிலேயே புதிய வழித் தடத்தைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூர் வரையிருக்கின்ற பாதை மிகவும் வளைவு உள்ள பாதைகளாகவும் அதிலே வேலைகள் நடந்து கொண்டிருப்பதாகவும், அந்தப் பகுதியிலே போகின்ற பேருந்துகள்கூட அடிக்கடி பழுதுபட்டு விடுகின்ற காரணத்தாலும், அந்தப் பகுதியிலே குளிர் சாதன வண்டியை விட்டால் மேலும் சூழ்நிலைகள் மோசமாகும் என்று என்னிடம் தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது சரியாக இருக்குமேயானால் அதைப் பார்த்து, ஆராய்ச்சி செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏழ்மை நிறைந்த நம்முடைய நாட்டில் ஏர்கண்டிஷன் பஸ்கள் அவசியம்தானா? அதிலும் குறிப்பாக ஒரு ஏர்கண்டிஷன் பஸ் மற்ற பஸ்களைவிட மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிக விலையாக இருக்கின்ற நேரத்தில், மக்களுக்கு அதிக வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு நிறைய பஸ்களை விடுவதற்கே நிதிவசதி சரியாக இல்லாத நேரத்தில் இதுபோன்று அதிகச் செலவில் ஏர்கண்டிஷன் பஸ்களை விடுகின்ற திட்டத்தை ரத்து செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏதோ அரசாங்கத்தினிடத்தில் நிறைய வசதியிருக்கிறது: அதன் காரணமாகத்தான் ஏர்கண்டிஷன்

பஸ்கள் விடப்படுகின்றன என்பது அல்ல. இங்கேகூட நெரிசல் நேரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதன் காரணமாக மாகத்தான் விரைவுப் பேருந்துகள் என்று சென்னையிலே நாம் விட்டிருக்கிறோம். காரணம், கொஞ்சம் வசதி படைத்தவர்கள் அதைப் பார்த்து, அதில் போகட்டுமே என்பதற்காகத்தான். அதைப்போல வசதியுள்ளவர்கள் இந்த ஏர்கண்டிஷன் பஸ்களிலே போகின்ற காரணத்தால் அரசாங்கத்திற்கும் அதிகமான வருமானம் வருகிறது. எவ்வளவு அதன் விலை கூடுதலாக இருக்கிறதோ அதற்கேற்ப நாம் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நஷ்டமோ அல்லது ஏர்கண்டிஷன் பஸ்களை விடுகின்ற காரணத்தினால் மற்றப் பேருந்துகள் குறைந்துவிடும் என்றோ எண்ண வேண்டாம். நிச்சயமாக இதன் காரணமாக இது குறையாது.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பெங்களூருக்குச் செல்லுகின்ற விரைவுப் பேருந்துகளில் இட நெருக்கடி அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. பெங்களூரிலிருந்து சென்னைக்குத் தனியார் பேருந்துகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூர் வரைக்கும் பாதையைப் பழுது பார்த்துக் கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள் அது, ஏற்கனவே இருந்த இடத்தை மாற்றிப் பாதைகள் அமைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், ஏற்கனவே போய்க் கொண்டிருக்கின்ற பாதையிலேயே அந்த பஸ்களை இன்னும் கொஞ்சம் கூடுதலாக பெங்களூருக்கு விடுவதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. மூத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் உள்ள ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் 5 பேருந்துகளை இயக்கிக் கொள்ளலாம் என்று சொல்லி, சென்னைக்கும் பெங்களூருக்கும் இயக்கிக் கொண்டிருக்கிறோம். மீண்டும் புதிதாக விடவேண்டுமென்று சொன்னால் அந்த ஒப்பந்தத்திலே கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒப்புதல் அளிக்கப்படுகிற சூழ்நிலை இப்பொழுது இல்லை. இருந்தாலும்கூட அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கேட்டால் நிச்சயமாக எத்தனை பேருந்துகளுக்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கிறார்களோ, அத்தனை பேருந்துகளை விட நாம் தயாராக இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது வசதி உள்ளவர்களிடம் அதிகமான கட்டணம் வசூல் செய்துகொண்டு ஏர்கண்டிஷன் பஸ்

1981 எப்ரல் 21]

விடுவதாகச் சொன்னார்கள். இப்பொழுது திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு வரக்கூடிய ஏர்-கண்டிஷன்ட் பஸ்ஸிலே எப்போதுமே டிக்கட்டுகள் முழுமையாக நிரம்புவது இல்லை. கடுமையான கூட்டம் இருந்த நேற்று கூட அதிலே ஒரு டிக்கட் காலியாகத்தான் இருந்தது. அதிலே வரக்கூடிய வருமானம் சொகுசு வண்டியிலே வரக்கூடிய வருமானத்தைவிடக் குறைவாக இருக்கிறது. ஆகவே தான் இவ்வளவு அதிகமான செலவு செய்து இப்படி ஏர்-கண்டிஷன்ட் பஸ்கள் விடுவதைவிட சாதாரண பஸ்களையும், சொகுசு பஸ்களையும் விடுவதைப் பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து இந்த ஏர்கண்டிஷன்ட் வண்டியை ரத்து செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி ஏர்கண்டிஷன்ட் பஸ்கள் வருகிற காரணத்தால், சொகுசு பஸ்கள் குறைந்து விடும் என்ற எண்ணம் வேண்டாம். ஆனால், எங்கே ஏ. சி. பஸ்களாலே நஷ்டம் ஏற்படுகிறதோ, அதை ரத்து செய்து லாபம் வரக்கூடிய அளவுக்கு, எந்தப் பேருந்திலே முழுக்க, எல்லோரும் ஏறுகிற அளவுக்கு வாய்ப்பு இருக்கிறதோ அந்த வழித்தடங்களிலே ஏற்படுத்தப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, நம்முடைய அமைச்சர் கர்நாடக அவர்கள் மாநிலத்திற்கும் தமிழக அரசிற்கும் 5 பஸ்கள் விடலாம் என்ற ஒப்பந்தம் இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே, மைசூருக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ரத்து செய்யப்பட்டு, பெங்களூர் வரைதான் செலுத்தப்படுகிறது. எனவே, மைசூருக்கு அந்த பஸ்ஸை முன்புபோல் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமேயானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவகாசியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக துணைப் பணிமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 826—திரு வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக துணைப் பணிமனை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS